REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்). ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

★ ★ சென்னை : 3—11—57 (ஞாயிறு) ★ வெளியூர் : 4—11—57 (திங்கள்) ★ ★

## இஞுகுலேஷனும்-இஞ்செக்ஷனும்

இஞுகுலேஷன்—இஞ்செக்ஷன், இந்த இரண்டும் ஊசி மூலம் மருந்து செலுத்தும் முறைதான் என்றாலும், இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. நோய் வருமுன் தடுத்து நிறுத்துவது இஞுகுலேஷன்; நோய் வந்தபின் அதைப் போக்க முயலுவது இஞ்செக்ஷன். இந்த சர்க்காருக்கு இஞ்செக்ஷன் போடத்தான் தெரியுமே தவிர, இஞுகுலேஷன் போடத் தெரிவதில்லை. எதற்கும் நாங்கள் இஞுகுலேஷன் முறை வேண்டுமென்கிறோம். 'இஞுகுலேஷன்' முறையைப் பின்பற்றியிருந்தால், 'முதுகுளத்தூரு'ம், 'மூாளீஸ் கபே'யும் நடக்க வழியிருந்திருக்காது.

சென்னை—கோடம்பாக்கத்தில் அண்ணா

# நவகாளி-ஜாலியன்வாலா கலந்தது

# முதுகுளத்தூர்!

## இரண்டுக்கும் காங்கிரசே காரணம்

### பழங்குடி மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தவறினர்

### சேற்றிலும் வறுமையிலும் பழங்குடியினரைத் தள்ளினர்

### தீ மூண்டது--அணைக்கத் தவறினர்!

### தேவர் துணை முன்பு--பகை இப்போது!

### நிர்வாகத் திறமை இல்லை-வந்தது விபரீதம்

### நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது அண்ணா பேச்சு

30—10—57 அன்று சட்டசபையில் மந்திரிசபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் கலந்துகொண்ட அண்ணா அவர்கள் ஆற்றிய உரை, இங்கு முழுவதுமாக ஆற்றியபடி தரப்படுகிறது :—

"இந்த மன்றத்தின் முன்னாலே, 'இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லை' என்று கொண்டுவரப்பட்டிருக்கிற கருத்தின் பேரிலே நடைபெறுகின்ற விவாதத்தில், எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கின்ற நாங்கள்—என்று சொல் அளவில் இருந்தாலும், எப்படி முக்குலத்தவர் என்றால் கள்ளர், மறவர், அகமுடையர் என்று மூன்று வெவ்வேறு பிரிவினர்கள் இருக்கிறார்களோ, அதுபோலவே, எதிர்க்கட்சியினர்கள் என்றிருக்கும் நாங்கள்—ஐந்து குலத்தைச் சேர்ந்தவர்கள்; ஆகையினால், இந்த ஆட்சியின் பேரிலே நம்பிக்கையில்லை என்ற பொதுவான கருத்தில் நாங்கள் பிரச்சினைகளை அணுகுவதில், அவரவர்கள் தம் தமது கோட்பாட்டுக்கு ஏற்ற கோணங்களில் பார்த்தால், ஏதோ எதிர்புறத்தில் உள்ளவர்களிடமிருந்து பலவேறான கருத்துக்கள் வந்துவிட்டன என்றோ, அல்லது கனம் சன்யாசி அவர்கள் தவறாகக் கருதிக்கொண்டு சொன்னதைப்போல, கட்சிகளை எல்லாம் மீறிக்கொண்டு சாதி உணர்ச்சி மேலிட்டுவிட்டது என்று, அந்த உணர்ச்சிக்கு அப்பாற்பட்ட என்னுடைய கழகத்தைச் சேர்ந்த சத்தியவாணி முத்துவின் போக்கை நினைக்க வேண்டிய அளவுக்குத் தவறான கருத்துக்கள் பரவி இருக்கின்றன.

"இந்தப் பிரச்சினை நாட்டு மக்களின் உள்ளத்தை மிகமிக அதிகமான அளவுக்குப் பாதித்துக் கொண்டிருக்கும் பிரச்சினை மாத்திரமல்ல; இதுபற்றி நாம் இங்கேபேசுகின்றவார்த்தைகளில் எந்த அளவுக்குப் பொறுப்பு உணர்ச்சியை கடைப் பிடிக்கின்றோமோ அதைப் பொறுத்துத்தான் தமிழ்நாட்டின் எதிர்கால அமைதி இருக்கிறது. இங்கே நாம் ஏதாவது ஒரு பக்கத்திலே இன்றைய தினம் ஒருசேரச் சேர்ந்து அதற்கான ஆதாரங்களை திரட்டியும், செய்திகளை வகுத்தும் பிரித்தும் கட்சிகளின் சார்பாகச் செய்துவிடுகின்ற காரணத்தினாலே அங்கே இருக்கின்ற புகைச்சலை நம்மால் அடக்கிவிட முடியாது. என்னைச் சார்ந்தவர்கள்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள்-இதில் பங்கெடுத்துக் கொண்டவர்கள்—அங்கு ஆதித் திராவிட மக்களுக்கு இன்றுமட்டுமல்ல, நீண்ட நெடுங்காலமாக இழைக்கப்பட்டிருக்கின்ற பெரிய கொடுமைகளை அவர்கள் சகித்துக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள். அவர்களுக்கு வரக்கூடிய ஆபத்தை முன்கூட்டியே கண்டுபிடிப்பதற்கு வக்கு இல்லாமல் இருக்கின்ற நிலையிலே, அதனை சட்டபூர்வமாக தடுப்பதற்கு வழியில்லாமல், இரண்டு பெரிய சாதியினரிடையே தீராத பகையை மூட்டிவிட்டார்கள் என்ற காரணத்தினால், இந்த அமைச்சரவையின் பேரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்—நம்பிக்கை இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அங்கே, ஆதித் திராவிட மக்களின் அல்லலை மற்றவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதை, உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது மட்டுமல்ல; போலீஸ் அமைச்சரவர்கள், ரோம்நாட்டில், ரோம் தீப்பிடித்து எரிகின்ற நேரத்தில் நீரோ மன்னர் பிடில் வாசித்ததாகப் பழைய வரலாற்றைக் குறிப்பிட்டார்கள்; புதிய ஆராய்ச்சியாளர்கள், 'அப்படி நீரோ மன்னர் அப்பொழுது பிடில் வாசிக்கவில்லை' என்று முடிவு கட்டியிருக்கிறார்கள்!

"'எரிகின்ற வீட்டில் ஏதோ கிடைத்தவரையில் இலாபம்' என்று அகப்பட்டதைப் பிடுங்கிக் கொண்டார்கள் என்ற தமிழ்நாட்டுப் பழமொழியை ஒரு உறுப்பினர் சொன்னார்; இதற்கு முன்னாலே நான் வருத்தத்தோடு கூறியிருப்பேன் — இன்றையத் தினம் பெருமையோடு சொல்கிறேன்; அந்த வட்டாரத்தில் எங்கள் கழகத்திற்கு இதுவரையிலே ஊன்றுகோல் இல்லை. 25 ஆண்டுகளாக நான் பொதுவாழ்வில் இருக்கிறேன்; நான், 'பரமக்குடிக்கு அப்பால் போய்ப் பேசியதில்லையே' என்று எண்ணியது உண்டு; 'அங்கெல்லாம் நம் கழகம் பரவவில்லையே' என்று எண்ணிக்கொண்டிருந்தேன்; இப்போது நான் எண்ணிக்கொள்கிறேன் — 'நல்லவேளையாகப் பரவவில்லை'—என்று! பரவியிருந்தால், அங்கே மூட்டப்பட்ட தீயிலே எந்த அளவுக்கு எங்களுக்கும் பங்கு உண்டு என்று சொல்லப்படுமோ, அங்கே நடந்த கொலைகளுக்கு நாங்கள் எத்தனைப் பேர்களைத் தூண்டிவிட்டோம் என்று சொல்லப்படுமோ தெரியாது. எங்கள் கழகத்திற்கு ஏற்பட்ட வளர்ச்சி நல்லவேளையாகப் பரமக்குடிக்கு அப்பால் தாண்டவில்லை என்று, இப்பொழுது கொஞ்சம் சந்தோஷப்பட்டுக் கொள்கிறேன்.

"இன்றையத் தினம் நம் முன்னுள்ள பிரச்சினை 'முதுகுளத்தூரில் நடந்தது நவகாளியா, ஜாலியன்வாலாவா? அல்லது இரண்டுமா?'—என்பதுதான்! ஜாலியன்வாலாவில் ஏற்பட்டது போல் படுகொலைகள் நடந்திருக்கின்றன; துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றிருக்கின்றன. பல குற்றங்களுக்காகத் தண்டிப்பதாகக் கூறிக்கொண்டு பல்வேறு மக்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வட்டாரத்தில் நல்ல செல்வாக்கு படைத்த முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் சிறையில அடைக்கப்பட்டிருக்கிறார். அவருக்கும் எனக்குமோ, அல்லது எங்கள் கழகத்துக்குமோ, அன்போ—தொடர்போ—பற்றோ பாசமோ இல்லை என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். ஒருக்கால் ஏர்ப்பந்தம் ஏற்பட்டால், அவர் காங்கிரசுடன் ஒன்றிப் போக முடியுமே தவிர, எங்களோடு ஈடுபட்டு ஒன்றிப்போய் விட முடியாது என்பது அரசியல் வட்டாரத்தில் நன்றாகத் தெரியும்.

"தடுப்புக்காவல் சட்டத்தைப் பற்றி நாங்கள் ஏதாவது பேசினால், அதில் சம்பந்தப்பட்ட ஆட்களை மறந்து, பிரச்சினையைப் பற்றி அணுகுகின்றோம். தடுப்புக் காவல் சட்டத்தை ஆட்சியாளர்கள் மிக மிகத் தாராளமாகப் பயன்படுத்துகிறார்கள். அன்று துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபடுகின்ற நேரத்தில் என்ன காரணங்களைக் காட்டினார்களோ, அதே காரணங்களை இப்பொழுது காட்டுகிறார்கள்.

"முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் 20 ஆண்டுக்காலமாகப் பலாத்காரத்தில் ஈடுபட்டிருந்தால் அவர்மீது வழக்குத் தொடருவதை நியாய உள்ளம் படைத்த யாரும் மறுக்க மாட்டார்கள். ஏ. கோவிந்தசாமி அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றது கண்டு பொறாத காங்கிரஸ்காரர்களின் தூண்டுதலின் பேரில் கொள்ளை, கொலை நடந்தன என்று சர்க்கார் அவர் பேரில் வழக்குத் தொடர்ந்தார்கள்; $1\frac{1}{2}$ ஆண்டுக்காலம் வழக்கு நடந்தது. கோவிந்தசாமி அவர்கள் பேரில் கொள்ளைக் குற்றம் சாட்டி வழக்குத் தொடரத் தயாராக இருந்தவர்கள், யாரைத்தான் கொலை பாதகர்கள் என்று சொல்லமாட்டார்கள்? உண்மையான கொலை பாதகர்களைக் கண்டுபிடிக்க எங்களுடைய துணையை நாடியிருப்பார்களேயானால், எங்களால் முடியுமானால் அந்தப் பொறுப்பிலிருந்து நாங்கள் தப்பித்துக் கொள்ளமாட்டோம்.

"இந்த முதுகுளத்தூர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் — 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்று சொல்லுவார்கள்—அதாவது, பார்த்தவர்கள் சொல்லவில்லை; சொன்னவர்கள் பார்க்கவுல்லை. என்னைப் பொறுத்தவரையில், 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' என்பதல்ல; நான் நேரடியாகப் பார்க்கவில்லை. விண்டவர் கண்டு சொல்லியதை எண்ணிப் பார்க்கிறேன்; இருவரும்உணர்ச்சி வேகப்பட்டிருப்பதை நான் நிச்சயமாக உணர்கிறேன். இந்த உணர்ச்சி மதவெறியின் காரணமா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை; அதுபோலவே, இந்த உணர்ச்சியினாலே இந்த அரசியலுக்கு இலாபம் அதிகமா—அந்த அரசியலுக்கு இலாபம் அதிகமா என்று சொல்லத் தேவையில்லை.

"என்னுடைய மதிப்பிற்குரிய கன்னியாகுமரி அங்கத்தினர் அவர்கள், 'ஆதித் திராவிட மக்களின் அல்லலைப் போக்க எல்லோரும் ஒன்றாகக்கூடி--அரசியல் கட்சிகள்—யோசித்தோம்' என்று சொன்னார்கள்; அம்மாதிரி கூட்டம் நடைபெற்ற தகவல் எனக்கு இல்லை. அதுபற்றி என்னை அணுகியிருந்தால்—எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்—ஆலோசனை கூறி, நாங்களே அதை நடத்த ஒத்துக்கொண்டிருப்போம். ஆதித் திராவிட மக்களைக் காப்பாற்ற இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் கொஞ்சம் அதிக்கிரமமான காரியங்களில் ஈடுபட்டிருந்தால்கூட அதை நாங்கள் தாங்கிக்கொள்வோம் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், தலைமுறை தலைமுறையாக அவர்கள் ஒடுக்கப்பட்டு பாழ்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மக்களின் உரிமை உணர்ச்சி இந்த 20 ஆண்டுக்காலமாகத்தான் ஏற்பட்டது. அதற்குக் காரணம், நாங்கள்தான் என்று, காங்கிரஸ்காரர்கள் மார்தட்டிக்கொள்கிறார்கள்; அதற்குக் காரணம் நாங்கள்தான் என்று, நாங்கள் எண்ணிக்கொண்டிருக்கின்றோம்; அதற்குக் காரணம், காலம் என்று உலக ஆராய்ச்சியாளர் கண்டறிந்து சொல்லுகிறார்கள்.

"மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்கு இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார் சரியான நேரத்தில் சரியான முறையைக் கையாளவில்லை. அவர்கள் ஏன் சரியான போலீஸ் படையை அமைத்துக் கொள்ளவில்லை; ஏன் 8 பேர்களைச் சிறையில் போட்டார்கள் என்று கேட்பது மட்டுமல்ல—நமது போலீஸ் அமைச்சர் தந்த அறிக்கையின் முதல் பகுதி எவ்வளவு முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது என்பதைப் பார்த்தால், 'இந்த நாட்டை ஆளுகின்ற சர்க்கார மக்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் அல்ல என்று தெரியவில்லையா?' என்று கேட்கிறேன்.

"'Out Break' — என்று இவர்கள் சொல்வதன் அர்த்தமென்ன? திடீரென்று எரிமலையைப்போல — அமைதியாக இருந்த பிரதேசங்களில் ஒரு கலவரம் வெடித்தால் 'அவுட்பிரேக்' என்று இவர்கள் சொல்வது உண்மையாக இருக்கும்.

"அறிக்கையின் பிற்பகுதியைப் பார்க்கப்போனால், சட்டத்தை மீறுகின்ற தன்மையில், பலாத்காரச் செயல்களில் மக்களைத் தூண்டிவிட்டுப் பெரிய குழப்பங்களையும், கலவரங்களையும் உண்டுபண்ணுகின்ற நிலைமை தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது என்பதான தகவல்களை நன்றாக எடுத்துத் தந்திருக்கிறார்கள். ஆகவே, இப்போது நடைபெற்ற கலவரத்தை, திடீரென்று, அமைதியாக இருந்த வேளையில்—யாரும் எதிர்பார்க்காத சமயத்தில் எரிமலைபோல 'அவுட் பர்ஸ்ட்' ஆன சம்பவம் என்று சித்தரிப்பது முன்னுக்கும் பின்னுக்கும் பொருத்தமில்லாத விஷயம். இந்தச் சர்க்காரிடத்தில் எங்களுக்குநம்பிக்கைஇல்லை என்று தெரிவித்துக் கொள்வதற்குக் காரணம், 'உங்கள் ஆட்சியில் சட்டம்

(2-ம் பக்கம் பார்க்க)

# சுட்டுக் கொல்வது காங்கிரசுக்குச் சுவையாகி விட்டது

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்—நாம் காணும் கோணம்

### பிரச்சினை முக்கியம்-பிரமுகர்களல்ல!

### நீதி விசாரணைமூலம் மாசு துடைத்துக்கொள்க!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்படவில்லை—பாதுகாக்கப்படவில்லை; உங்கள் ஆட்சியில் பலாத்காரம் தலைதூக்குகிறது சட்டத்தை மதித்து பலாத்காரம் தலைதூக்காமல் செய்யக்கூடிய திறமை உங்களுக்கு இல்லை; பலாத்காரத்தை ஒடுக்கும் திறமையில்லாத நீங்கள் அதை மறைத்து, உங்களுடைய நலனுக்கு அதைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறீர்கள். உங்கள்பேரில் நம்பிக்கையில்லை எனத் தெரிவிக்கும் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் இருந்து ஆதரிப்பது, இதனால்தான்.

"இந்த ராஜ்ய மக்களுடைய—ஆதிதிராவிட மக்களாக இருந்தாலும் சரி, பிற்பட்ட இனத்து மக்களாக இருந்தாலும் சரி—உயிருக்கோ, உடைமைக்கோ உங்களால் பாதுகாப்பு கொடுக்கமுடியவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்குப் பதிலாக, அவர்கள் மேல் எடுக்கப்படுகிற பலாத்காரச் செயல்களுக்கு நீங்களும், உங்கள் சுயநலத்தின் காரணமாக உடந்தையாக இருக்கிறீர்கள் என்கிற காரணத்தினால், உங்கள்மீது நம்பிக்கையில்லை என்று சொல்லுகிறேன்.

"மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் இன்றைக்கும்கூட, 'எண்ணிக்கையைப் பாருங்கள்' என்று சொன்னார்; நேற்றும் சொன்னார்; சந்தர்ப்பம் கிடைக்கும் நேரத்தில் எல்லாம் சொல்வார். எத்தனைமுறை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்; எண்ணிக்கையில் பெருத்தவர்கள் அவர்கள்; ஆனால் நிச்சயமாக, நியாயம் என்பது எண்ணிக்கையைப் பொறுத்தது மட்டுமல்ல—எண்ணத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது; மனத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

"அவர்கள் 150 பேர் அங்கே இருக்கிற காரணத்தினாலே—நாங்கள் இங்கே 40 பேர் இருக்கிற காரணத்தினாலே, இந்தப் பக்கத்திலுள்ள கந்தசாமி கருப்பாக இருக்கிறார், 'காக்கையும் கருப்புதான்; ஆகவே, கந்தசாமியும காக்கைதான்' என்று சொன்னால்—அவர்கள் 150 பேரும் 'ஆம்' என்றால், அந்த ஒரு காரணததினாலே கந்தசாமியும் நிச்சயமாகக் காக்கை ஆகிவிடமாட்டார்.

"'கந்தசாமி கருப்பாக இருக்கலாம்—காக்கையும் கருப்பாக இருக்கலாம்; அந்த ஒரு காரணத்திற்காக, கந்தசாமி காக்கை ஆகமாட்டார்' என்று இந்த பக்கத்தில் இருக்கிற—எண்ணிக்கையில் அவர்களைவிடச் சிறுத்த நாங்கள் 40 பேர் சொன்னால், எண்ணிக்கையில் சிறுத்தவர்கள் என்பதற்காக இது 'இல்லை' என்று ஆகிவிடாது. இப்படித்தான் நியாயத்தை—நீதியை இந்த சனநாயகக் காலத்தில், எண்ணிக்கையைக்கொண்டு நிர்ணயித்துவிட முடியாது. நல்ல சனநாயகப் பண்பை ஸ்தாபிக்கக் கூடிய திறமை வாய்ந்த நிதி அமைச்சர் அவர்கள், தாங்கள் எண்ணிக்கையில் பெருத்திருக்கிறோம் என்பதற்காக, எண்ணிக்கையைக்கொண்டு நியாயத்தை நிலைநாட்டிவிடுவோம் என்று எண்ணி அப்படிப் பேசியிருப்பார்கள் என்றால், அது நிச்சயமாக முடியாது என்பதை எதிர்க்கட்சி நன்றாக உணர்ந்திருக்கிறது.

(கனம் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் குறுக்கிட்டு, 'நான் நேற்று சொன்னது நியாய—அநியாயத்திற்கு எண்ணிக்கையைப் பாருங்கள் என்று சொல்லவில்லை; மக்கள் யார் பேரில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதற்கு எண்ணிக்கையைப் பார்க்கச் சொன்னேன்; நியாய—அநியாயத்திற்குச் சொல்லவில்லை. இந்த அளவு வாதத்தைச் சொல்லக்கூடிய அளவு குறைவாகப் பேசுவதற்கு நான் எப்போதும் இறங்கமாட்டேன்' என்றார்.)

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசியதாவது:—

"மக்கள், ஆளுகின்றவர்களிடம் நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்வது 5 ஆண்டுக் காலத்திற்கு ஒருமுறைதான்; இடையே அவர்களுக்கு ஏற்படுகின்ற நம்பிக்கையில்லாத மனக்கசப்பை—மனக்குமுறலை ஆளுகின்றவர்களுக்கு எடுத்துக்காட்டுவது எதிர்க்கட்சியின் பொறுப்பு.

"இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானமும்கூட, உங்களைப் பதவியிலிருந்து இதன்மூலம் விலக்கிவிட முடியும் என்கிற நம்பிக்கையில், எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படவில்லை; அப்படி எதுவும் நடந்துவிடாது என்கிற எண்ணம் உங்களுக்கு இருக்கின்றபடியினால்தான் இங்கே உட்கார்ந்து சிறப்பான வாதங்களையெல்லாம் செய்துகொண்டு இருக்கிறீர்கள்; இல்லாவிடில், இங்கே உட்கார்ந்து வாதங்கள் புரிந்துகொண்டிருக்கமாட்டீர்கள்; தனித்தனியாகத் தங்களுக்கு ஆள் சேர்க்க முயன்றுகொண்டிருப்பீர்கள்; ஆகையால், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் மகத்தான ஆபத்து உங்களுக்கு வந்துவிடும் என்று நாங்கள் மனப்பால் குடிக்கவில்லை. அமைச்சரவையைத் தள்ளிவிட இந்தத் தீர்மானத்தால் முடியாது என்கிற ஒரு காரணமும் இருக்கலாம்—நான் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு!

"ஆளுகின்ற அமைச்சரவை பிரம்மாண்டமான வலுவில் இருக்கிறது; மிகச் சிறிய எண்ணிக்கையாக உள்ள எங்களால் அவர்களுக்குப் பாடம் கற்பிக்கமுடியும் என்று நாங்கள் நினைக்கவில்லை. காலம் ஒன்றுதான் அவர்களுக்குப் பாடம் காட்டமுடியும். அவர்கள் ஆளும் கட்சி—நாங்கள் எதிர்க்கட்சிகள்!

"எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள் ஒவ்வொரு கோணத்திலிருந்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதற்குக் காரணம், எதிர்கால அமைதியானது பாதுகாக்கப்படவேண்டும் என்கிற ஒரு எண்ணம்தான்.

"சட்டமன்றத் தலைவர் அவர்களே! உங்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல சந்தர்ப்பங்களில் நான் இங்கே பேசவேண்டும் என்று ஆசைப்பட்டேன்—நீண்டநேரம் பேசவேண்டும் என்று ஆசைப்பட்டதுண்டு—நன்றாகப் பேசவேண்டும் என்றும் ஆசை; ஆனால், எனக்குப் பேசாமலிருக்கும் சந்தர்ப்பம் இந்தச் சமயத்தில் கிடைத்திருந்தால், நான் எத்தனையோ மகிழ்ச்சியுடையவனாக இருந்திருப்பேன். இந்தப் பிரச்சினையைப் பற்றி—பொது மேடைகளிலும் சரி, சந்தர்ப்பம் கிடைக்கிற நேரத்திலும் சரி—மிக ஜாக்கிரதையாக நழுவிவிட்டிருக்கிறேன்; பேசாமல் இருந்திருக்கிறேன். பத்திரிகையில் ஒருவார்த்தைகூட எழுதவில்லை; காரணம், இந்தப் பக்கத்தில் நியாயம் இருக்கிறதா—அந்தப் பக்கத்தில் நியாயம் இருக்கிறதா என்பது ஒருபுறத்தில் தெரிந்துகொள்ளமுடியாத சூழ்நிலை சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது என்பதுமட்டுமல்ல; 'அந்தப் பிராந்தியத்து மக்கள் மிகவும் சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள்'—என்று அந்தப் பக்கத்திலிருந்து அம்மையார் சொன்னது போல—நாம் அனுபவிக்கிற அரசியல்முறை 1957-ம் ஆண்டுடன் முடிவடைந்துவிடப் போகிறதில்லை—நல்ல ஆற்றல் படைத்த மக்கள் அவர்கள்—பழி துடைக்கப்படுகிறவரையில் உள்ளம் கொதித்துக்கொண்டிருக்கப் போகிறார்கள்—இந்தச் சமயத்தில் எந்தப் பக்கத்தை ஆதரித்து நம்முடைய செல்வாக்கை அதிகப்படுத்திக்கொள்வோம் என நாங்கள், சிலரைப்போல, அரசியல் தந்திரம் படைத்தவர்களாக இருக்கவிரும்பவில்லை. ஒன்றைப் பற்றி எழுதினால்—ஒன்றைப் பற்றிப் பேசினால்—அதன் விளைவாக அந்தப் பகுதியில் மீண்டும் ஓர் அமளி ஏற்படுமானால், சீக்கிரத்தில் உணர்ச்சிவயப்படக்கூடிய மக்கள் கொதித்தெழுவார்களேயானால், அதற்கு நாமேதான் பொறுப்பாளியாக வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட நிலையை உண்டாக்கி அவர்களுக்கும், ராஜ்ஜியத்திற்கும் தீங்கை உண்டுபண்ணாமல், அமைதியாக—அவர்களைப் புண்படுத்திவிட்டோம்; புண்ணையாற்ற நியாயமான முறையில் மருந்து போடவேண்டும் என்கிற தன்மையில்—பேசாமல் இருந்தேன். இப்போதும்கூட இந்தத் தீர்மானத்தின்மீது பேச விரும்பவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அமர்ந்திருக்கிற உறுப்பினர்கள், தங்கள் கருத்தை எடுத்துச்சொல்லவேண்டும் என்கிற நிலைமை வந்ததால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாங்கள் எந்தெந்தக் காரணத்திற்காக ஆதரிக்கிறோம் என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்; அந்த முறையில்தான் இப்போதும் பேசுகிறேன்.

"தன்னைத்தானே—இப்போது செய்திருக்கும்படியான காரியத்திற்காக—போலீஸ் மந்திரி அவர்கள் ஒரு பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டார்; 'நல்லதொரு நடவடிக்கையைப் போலீஸ்காரர்கள் எடுத்திருக்கிறார்கள்' என்று தெரிவித்தார் எதிர்க்கட்சியிலிருந்து திரு. சசிவர்ணத் தேவர் அவர்கள், எப்படி நடந்துகொண்டார்கள் என்பதைத் தெரிவித்தார்; ஆதித்திராவிட மக்களுடைய முன்னேற்றத்தில்—அந்தச் சமூகத்தாருக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தைத் துடைப்பதில் தாங்களும் பங்குகொள்ளத் தயார் என்பதாக அவரும், மூக்கையத் தேவரும் சொன்னார்கள், அந்தக் கருத்துக்கு நமது அமைச்சர் அவர்கள், நல்ல உருவம் கொடுத்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதும் என் அவா.

"நாம் நீண்டநாள், ஒரு சமூகத்தைப் பகைத்துக்கொண்டு வாழ முடியாது; போலீஸ் மந்திரி நமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, நிரந்தரமாகவும் போலீஸ் பட்டாளங்களை வைத்துக்கொண்டிருக்க முடியாது; அங்கே உள்ள சமூகத்தார்களுக்கு மனக்கசப்பையும், பகைமை உணர்ச்சியையும்தான் அது வளர்க்க உதவும்.

"முத்து ராமலிங்கத் தேவர் அவர்கள் பல காலமாக மற்றக் கட்சிகளைப் பற்றி எந்த அளவுக்குப் பேசியிருக்கிறார்கள்—என்னைப் பற்றியும், என் கட்சியைப் பற்றியும் எத்தனை விதமாகப் பேசியிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவற்றை எல்லாம் நான் இப்போது இந்த மன்றத்தில் எடுத்துப் பேசப்போவதில்லை. முதலமைச்சர் அவர்கள் கள்ளநோட்டு அடித்தவர்கள் என்று அவர் சொன்னதாகப் பலர், அந்தப் பக்கத்திலிருந்து சொன்னார்கள்; தேவர் அதோடு நிற்கவில்லை—அதில் ஒரு பங்கை முதலமைச்சர் அவர்கள் என்னிடமும் கொடுத்து இருக்கிறார்—என்றும் சொல்லி இருக்கிறார்கள்; ஆகவே, அவருக்கும் எனக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகவோ, பாசம் பற்று இருப்பதாகவோ எண்ணிக்கொண்டு நான் இந்த மாதிரியாகப் பேசுவதாக யாரும் நினைக்கக்கூடாது. 'முத்துராமலிங்கத் தேவர் 1932-ம் வருடத்திலிருந்தே பாண்டியமண்டலத்தில் சாதித் துவேஷம் வளரக்கூடிய வகையில் பிரச்சாரம் செய்துவந்திருக்கிறார்' என்று சொல்லப்பட்டது; 'வகுப்புக் கலவரம், சாதித் துவேஷம் இவை எல்லாவற்றிற்கும் அவர் உடந்தையாக இருந்துவந்தவர்' என்று பேசப்பட்டது; இப்போதுதான் எனக்கு ஒரு தபால் வந்தது—அது ஒரு பத்திரிகை—இரங்கூன் நகரத்தில் கடல்கடந்து நிற்கும் தமிழர்கள் முத்துராமலிங்கத் தேவரின் பிறந்ததின விழாவைக் கொண்டாடும் அழைப்பிதழ்; அவரைப் பற்றி இப்போது, வெறுத்து ஒதுக்கத்தக்கவராகப் பேசிக்கொண்டிருக்கிறோம் அங்கே, அவர் உள்ளத்தில் வைத்துக் கொண்டாடப்படுபவராக இருக்கிறார்.

"உலகத்தார் வைத்திருக்கிற கருத்து இன்றையத் தினம் இந்த ராஜ்ய ஆட்சியாளர்கள் வைத்திருக்கின்ற கருத்தாகத்தான் இருக்கவேண்டும் என்பது இல்லை; அவர்கள் கருத்தே நாம் வைக்க வேண்டும் என்பதும் இல்லை; ஆனால், உலகத்தார் வைக்கின்ற கருத்துக்கு மதிப்பு அளிக்கவேண்டும், உலகத்தார் எல்லாம் போற்றுகின்ற உத்தமராக முத்துராமலிங்கத் தேவர் இருப்பாரானால், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அவரோடு கலந்து பேசி, ஒரு சமரச சூழ்நிலையை அந்தப் பிராந்தியத்தில் உண்டுபண்ண ஏன் முயற்சிக்கக் கூடாது? அப்படி இவர் பேசுவதை வேண்டாம் என்று யார் குறுக்கிட்டார்கள்? குறுக்கிடுகிறார்கள் என்றால், ஏன் குறுக்கிடுகிறார்கள்?

"முதுகுளத்தூர் பிரச்சினையாக இருந்தாலும் சரி—'மூரளி கபே' பிரச்சினையாக இருந்தாலும் சரி, எந்தப் பிரச்சினையையும் மூலையிலேயே அணுகினால்தான் அதைத் தீர்க்கமுடியும் என்ற அரசியல் தத்துவத்தை உங்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 'சாதிப் பெயர் குறிக்கும் பலகையை எடுக்கவேண்டும்' என்று கிளர்ச்சி செய்கிறார்கள்; இதை நடத்துகின்றவர் பெரியார் இராமசாமி; 700 தொண்டர்களுக்குமேல் சிறை சென்றிருக்கிறார்கள்' என்று கேள்வி ஒன்றுக்குப் பதில் சொல்லுகையில் சொன்னார்கள்.

"நான் பத்திரிகையில் பார்த்தேன்—கேரள சர்க்கார், 'உணவு விடுதிகளில் சாதி அறிவிப்புப் பலகைகளைத் தாங்களாகவே நீக்கிவிடவேண்டும்' என்று ஒரு அறிக்கை மூலம் உத்தரவு போட்டிருக்கிறார்கள்; 'அவைகளை நீக்காவிட்டால், சர்க்காரே அந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்' என்று இருக்கிறது. அதற்கு, ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்திலிருந்து எடுக்கவேண்டியதில்லை; கருணையோடு மனம் வைத்தால் இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்கமுடியும்.

"திரு. இமானுவல் படுகொலை செய்யப்பட்டதைப் பற்றி இங்கு பேசினார்கள்; உண்மையில் அவர், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்ல—தமிழ் நாட்டிற்கே ஓர் பெரிய தியாகம் செய்திருக்கிறார். இமானுவல் இராமநாதபுரத்து மண்ணிலே மறைந்த ஒரு மாவீரன் மட்டும் அல்ல—உலகமே புகழும் ஒரு வீரனாகவே அவரைக் கருதவேண்டும். நாட்டின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டு தன்னையே பலியாக்கிக்கொண்ட ஒரு தியாகியை இழந்தோம்; அவர் பெயர், இந்த நாட்டு சரித்திரத்திலேயே பொறிக்கப்படவேண்டியது.

"திரு. முத்துராமலிங்கத் தேவர் மறவர்களுக்குமட்டும்தான் தலைவராக இருந்தார்; அதேபோல, ஆதித்திராவிட மக்களின் தலைவராக விளங்கினார் திரு. இமானுவல் என்பதை அமைச்சரவை அறியும்—இந்நாடு அறியும்.

"முதுகுளத்தூரில் இமானுவல் படுகொலை செய்யப்பட்ட பிறகு அங்குள்ள மக்கள், தங்கள் தலைவரை இழந்ததற்காக ஆத்திரம் கொள்வதும், ஆத்திரத்தில் பழிக்குப்பழி வாங்க முயல்வதும் இயல்பு. அவர்களின் வீரிட்டெழும் உணர்ச்சியை ஆட்சியாளர் உணர்ந்திருப்பார்களேயானால், அங்கே போலீஸ் படையை உடனே அனுப்பியிருப்பார்கள்; அந்த வட்டாரம் பூராவும் போலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும்—அல்லது போலீஸ் நிர்வாகத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

"சம்பவம் நிகழ்ந்த நான்கு நாட்களில் மேலும் கலவரம் வளராது தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காது, அவசர அவசரமாகத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட பிறகு, திரு. வெங்கடேசுவரனை வைத்து விசாரணை நடத்தினார்கள். அவர்களின் நிர்வாகத் திறனைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களே சொன்னார்கள். அதிகாரிகளின் நிர்வாகத் திறமையை அறிந்துகொள்ளக் கூடிய அளவிற்கு எனக்கு அரசியல் அறிவும் இல்லை—அனுபவமும் இல்லை.

"10-ந் தேதியன்று இமானுவல் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். நான்கு நாட்கள் கழித்து போலீஸ்படை வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் போய்விட்டாரே என்று அந்த மக்கள் கொதித்து எழுவதில் என்ன ஆச்சரியம்? திரு. சிதம்பர பாரதி அவர்கள்—யாராவது இந்தத் தென்பாண்டிய மண்டலத்திலே, திரு. முத்துராமலிங்கத் தேவருக்கு எதிராகப் பேசுவார்களேயானால் அவர்கள் தலை உருளும்—என்று சொல்லுவ

(3-ம் பக்கம் பார்க்க)

# தியாகி இமானுவேலுக்கு நாடு தரும் வீர வணக்கம்

## இனியும் 'முதுகுளத்தூர்' மூளாதிருக்க வழி காண்க!

## எண்ணிக்கைபலம்மட்டும் காங்கிரசுக்குப் போதாது

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகச் சொன்னார்கள். என்னை விட அவர் தைரியசாலி; இல்லா விட்டால் இவ்வளவு தைரியமாகப் பேசுவாரா? கலகம் நடந்த இடத்தில் விசாரணை நடத்துவதற்கு, திரு. வெங்கடேசுவரன் அவர்களை அனுப்பியிருக்கிறார்கள். தேனி தியாகராசன்கூட இவரைப் புகழ்ந்திருக்கிறார். அப்பொழுது இருந்த சூழ்நிலையில் சாட்சிகள் எப்படி வருவார்கள்? ஒரு பக்கம் விசாரணை நடக்கிறது; மற்றொரு பக்கம் தீவைத்துக்கொண்டே போகிறார்கள். அப்பொழுது இந்தச் சூழ்நிலையில் சாட்சிகள் எப்படி வருவார்கள்? கனம் போலீஸ் அமைச்சர் கூறுகிறார்—'அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்கப்பட்டது'—என்று! எஸ். ஏ. பி. 8; எம். எஸ். பி. 4; ஆர்ம்டு ரிசர்வ் போலீஸ் 4; வயர்லெஸ் செட் 4-அனுப்பிவைத்திருப்பதாகப் புள்ளி விவரம் தருகிறார்.

"அங்கே இருக்கும் வீடுகள் ஏராளமாகத் தீக்கிரையாகிக் கொண்டிருக்கும்போது, தீயை அணைப்பதற்குத் தீ அணைக்கும் படையை அனுப்பவில்லை.

"சில நாட்களுக்குமுன்தான் இந்தத் தீ அணைப்புப்படை வாரம் கொண்டாடினார்கள்; அந்த விழாவில், ஒரு படத்தைப் பார்த்தேன்—'உயரமான மாடியில் தீப்பிடித்து விட்டால் கீழே குதித்துவிட வேண்டும்; கீழே ஒரு வலை கட்டப்பட்டிருக்கிறது; அந்த வலையை உபயோகப்படுத்தவில்லையானால் உயிரிழக்க நேரிடும்' என்று காட்டினார்கள்; ஆனால், 'அதுபோன்ற வலை நமது அரசிடம் இல்லை' என்று அதிகாரி கூறினார்.

"தீ அணைப்புப் படை அரசாங்கத்திடம் இருந்தும், பயன்பட வேண்டிய சமயத்தில் உபயோகப் படுவதில்லை. அங்கு தீ பரவாமல் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அங்குள்ள கட்சித் தீ பரவாமல் தடுப்பதற்கும் தவறிவிட்டது.

"திரு. ஏழுமலை அவர்கள், 'எங்கள் கட்சி நிதானமானது' என்று சொன்னார். ஆம்; யார், இல்லை என்று சொன்னது? பார்த்த பிறகுதானே தெரிகிறது—அங்கு இரண்டு கட்சிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன—ஒன்று காங்கிரஸ் கட்சி; மற்றொன்று பார்வர்டு பிளாக். நாடார்கள் தாழ்த்தப்பட்ட மக்களைத் தூண்டிவிட்டதாகக் குற்றஞ் சாட்டியிருக்கிறார்கள். எனக்கு காங்கிரஸ் நாடார்களைப் பற்றித் தெரியாது; ஆனால் நாடார்களைப் பற்றித் தெரியும்—நாடார் அவைகளை நாடார்!

"இந்தப் பத்து ஆண்டுக் காலமாக—நான் கேட்கிறேன்—நீங்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைப் பயன்படுத்தும் அளவிற்கு எந்த ஜனநாயக சர்க்காராவது பயன்படுத்தி இருக்கிறதா? நீங்கள் வணங்கும் ஆண்டவன் பெயரால் கேட்கிறேன்—நீங்கள் கடைப்பிடிக்கும் காந்திய நெறியின் பெயராலும் கேட்கிறேன்—உங்கள் நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள்—இத்தனை ஆண்டுக்காலமாக நம் நாட்டிலே நடந்த துப்பாக்கிப் பிரயோகம் உலகத்தில் எந்த நாட்டிலாவது இந்த அளவுக்கு நடந்ததுண்டா? நீங்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதை நாங்கள் கண்டித்தால், உடனே போலீஸ் அமைச்சர், 'நாங்கள் இங்குமட்டுமா துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினோம்; இதற்கு முன்னமேயே தூத்துக்குடியில் நடத்தினோம்—டால்மியாபுரத்தில் நடத்தினோம்—வால்பாறையில் நடத்தினோம்—பைத்தியக்கார மக்களே! இதுதானே எங்கள் வேலை; இப்போது முதுகுளத்தூரில் சுட்டதற்கு நீங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தீர்களே' என்று சொல்லுவார்கள்.

"ஆம்; இன்னும் இந்த ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில், எத்தனை முறை இந்தத் துப்பாக்கித் தோட்டாக்களைப் பயன்படுத்தப்போகிறீர்களோ? யார் யார் பலியாக இருக்கிறார்களோ என்று எண்ணி வேதனைப்படுகிறேன். அதனால்தான் உங்கள்மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லுகிறேன்.

"நான் பத்திரிகையில் பார்த்தேன்—துருக்கி நாட்டில் ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததற்கு, அந்தக் கட்சிக்கும் மற்றொரு கட்சிக்கும் தகராறு மூண்டு ஏறக்குறைய 7,000 பேர்—கலகத்தில் ஈடுபட்டவர்கள் — ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அந்தக் கூட்டத்தைக் கலைக்க துருக்கி சர்க்கார் உபயோகப்படுத்தியது துப்பாக்கியை அல்ல; அவர்கள் மீது தண்ணீரை இறைத்துக் கலைத்திருக்கிறார்கள்.

"அங்கே ஏராளமான கூட்டம் பெரும் கலகம் விளைவித்தபோதிலும், அந்த சர்க்கார், தீயணைக்கும் படையின் உதவியினால், கலகத்தைத் தடுக்க அந்த மக்கள்மீது தண்ணீர் இறைத்துத் துரத்தியிருக்கிறார்கள்.

"ஆனால் இங்கு நடந்ததோ என்னவென்றால், கூட்டத்தைக் கலைப்பதற்குத் துப்பாக்கியை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். கீழத்தூவலில் நடந்த சம்பவத்தில் 5 பேரைச் சுட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்; இதற்காகப் போலீஸ் படை சென்றிருக்கிறது. சுடுவதற்கு அனுப்பப்பட்ட அதிகாரியும் சுடுவதிலே பழக்கப்படாதவர் அல்ல—அதில் கைதேர்ந்தவர்; ஆனால் சுடுவது மிருகங்களையோ பறவைகளையோ அல்ல—மக்களை என்று நினைவில்கொள்ள வேண்டும்.

"நான் சொல்லுவதென்னவென்றால், அதிகாரிகள் பாரபட்சமாக நடந்துகொண்டார்களா இல்லையா என்பது அல்ல; அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பு சரியானதா இல்லையா என்பது பற்றித்தான் சொல்லுகிறேன்.

"ஒரு சில தினங்களுக்கு முன்னால், டில்லி பாராளுமன்றத்தில், உள்நாட்டு அமைச்சர் ஒரு வாக்குறுதி அளிப்பதுபோலச் சொன்னார்கள்—We will shoot to scare; not shoot to kill—என்று! 'நாங்கள் கொல்லுவதற்காகச் சுடப்போவதில்லை; விரட்டுவதற்காகவே சுடப்போகிறோம்'—என்று சொன்னார்கள்; அப்படி, பந்த் அவர்களே சொன்னார்கள்; அதைக் கண்டு, 'பந்த் அவர்களே இப்படிச் சொல்லியிருக்கிறார்களே; ஆகவே, இனி போலீசார் சுடமாட்டார்கள்' என்று இந்தப் பேதை நெஞ்சம் நினைத்துக் கொண்டிருந்தது.

"கொல்வதற்காகத்தான் சுட வேண்டும்; சுட்டுக் கீழே விழுந்த பிணங்கள் மறவர்கள் பிணங்கள்தான்; அவர்கள் கொடுமை செய்தவர்கள்; அதனால், அந்தப் பிணங்கள் விழுந்தால் பரவாயில்லை—என்று சிலர் சொல்லலாம்.

"ஆனால் அடுத்த குண்டு யார் பேரில் பாயும்; இந்த ஐந்து வருடங்களுக்குள் யார் யார் மேல் குண்டு பாயப் போகிறது; எத்தனை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் போகிறார்களோ; எத்தனை பேர் அதனால் உயிர்நீக்கப் போகிறார்களோ; எந்த எந்த இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடக்க இருக்கிறதோ என்று எண்ணிப் பார்க்கும்போது, இந்த அமைச்சரவையின்மீது நமபிக்கையில்லை என்று சொல்லத் தோன்றுகிறது.

"நான் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன் — 'உங்கள் அறிவில், ஆற்றலில் எனக்குச் சந்தேகம் இல்லை' என்று; ஆனால், 'நிலைமையைக் கண்டு அறிந்து கொள்வதற்கு நீங்கள் வைத்திருக்கும் அதிகாரிகள், உங்களுக்குச் சரியான தகவல் தரவில்லை—நீங்கள் நன்கு ஆள வாய்ப்புத் தரவில்லை' என்றுதான் நான் கருதுகிறேன்.

"முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், 1930, 1933-ம் ஆண்டிலிருந்து இன்றையத்தினம் வரையில் அங்கு பெற்றிருக்கும் செல்வாக்கைப் பற்றி எல்லோரும் எடுத்துச் சொல்லுகிறார்கள். சசிவர்ணத் தேவர் அவர்கள் எடுத்துச் சொன்னபோது, 'முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் மறவர்களின் சமூகத்தில் மட்டுமல்ல—பிற சமூகத்தாரிடமும் நல்ல செல்வாக்குப் பெற்றவர்' என்று எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் எடுத்துச் சொல்லும்போது, 'அவர் சாதி ஆதிக்கத்தால் செல்வாக்குப் பெற்றார்' என்று சொன்னார்கள். அது எப்படி இருந்தாலும், அவருடைய செல்வாக்கு மகத்தானது என்பதை யாரும் மறுக்கவில்லை. அவருடைய இந்தச் செல்வாக்கு இன்றையத்தினம், கொலைக்கும் கொள்ளைக்கும் பயன்பட்டதாகச் சொல்லும்போது, இந்தச் செல்வாக்குத்தான் காங்கிரசிற்கு 10, 15 ஆண்டுகளாகப் பயன்பட்டது அல்லவா என்று கேட்கிறேன்.

"தேவர் அவர்கள் தரும் தொல்லைகள் பற்றி இப்பொழுது அமைசசர்கள் அல்லல்படுகிறார்கள். ஏன்? இப்பொழுது அவர்கள் தரும் தொல்லைகள் காங்கிரசிற்கு ஏற்படுகிறது. அன்று நான் சேர்ந்திருந்த ஜஸ்டிஸ் கட்சி அல்லற்பட்ட காலத்தில், அவரது தொல்லைகள் பற்றி—அவர் கொடுத்த தொல்லைகள் பற்றி ஒரு வார்த்தையாவது-ஒரு சின்ன வார்த்தையாவது சொன்னதுண்டா? 1937-ல் கூட அவர் காங்கிரஸ் அபேட்சகராயிருந்து இராமநாதபுரம் ராஜா சுயேசசையாக நின்றபோது, எஸ்டேட் தாசில்தார் தாக்கப்படவில்லையா? 'அவர்களின்பேரில் நாங்களேயல்லவா வழக்குத் தொடுத்தோம்' என, நேற்றையத்தினம் நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முத்துராமலிங்கத் தேவரின் செல்வாக்கை நீங்கள் திருப்பரங்குன்றத்தில் உபயோகித்துக் கொள்ளவில்லையா? அப்பொழுதெல்லாம் தேவர், பலாத்கார மனிதனாக இல்லாமற்போனது ஏன்?

"நிதியமைச்சர் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர்தான்; ஆனாலும், நாங்கள் சொல்லுவதை எண்ணிப்பார்க்கவேண்டும்; அப்பொழுது நீங்கள் என்ன செய்தீர்கள்? மேலும் அவரைத்தான் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தி வைத்தீர்கள்? தென்பாண்டி மண்டலத்தில் அவருடைய செல்வாக்கைக் கொண்டுதானே நீங்கள் ஆதிக்கம் பெற்றீர்கள்? அவரைக் காட்டித்தானே ஜஸ்டிஸ் கட்சியை விரட்டினீர்கள்? அன்று அவரது செல்வாக்கைப் பெற்று வளர்ந்துவிட்டு, இன்று அவரை 'பலாத்கார மனிதர்' என்கிறீர்கள். அவ்வளவு பயங்கரமான மனிதரை என் இவ்வளவு தூரத்திற்கு வளர்த்துவிட்டீர்கள்? அங்கு இப்பொழுதுள்ள நிலைமையை அடக்குவதாகச் சொல்லி இரண்டு வகுப்பாரிடையே பகையை மூட்டுகிறீர்கள் என்று பயப்படுகிறேன்.

"ஆகவே, நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய நிலைமை, எடுக்கப்படுகிறமுறை எடுப்பதின் அளவு இம்மூன்றிலும், நீங்கள் பெற்றிருக்கிற அரசியல் செல்வாக்கைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல், எத்தனை அரசுகள் வளர்ந்தன—எத்தனை அரசுகள் அழிந்தன என்ற வரலாற்றினை மனதில் வைத்துக் கொண்டு போலீஸ் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

"காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் சொன்னார்—கீழத்தூவலில் ஐந்து மறவர்களின் கையைக் கட்டியோ, காலைக் கட்டியோ, கண்ணைக் கட்டியோ போலீசார் சுட்டார்கள் என்பதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை—ஆனால், 'போலீசார் அவ்வளவு பலாத்காரம் உபயோகித்திருக்க வேண்டியதில்லை' என்று சொன்னார். எப்படிச் சுட்டாலும், சுடக்கூடிய அளவிற்கு அங்கு உணர்ச்சி ஓங்கியிருக்கிறது.

"திரு. வெங்கடேசுவரன் அறிக்கையில், '300 பேர்கள் வந்தார்கள்; பலாத்காரத்தோடு இருந்தார்கள்; ஆயுதங்களை வைத்திருந்தார்கள்; ஒருமுறை இரண்டுமுறை சொல்லியும் அக்கூட்டம் கலையாததால், சுட்டார்கள்' என்கிறார்.

"இன்னொரு இடத்தில்,

An armed gang of 500 Thevars which went about setting fire to Palla houses and looting properties in Pacheri, Kaloorani and surrounding :villages was encountered by a Special Armed Police party under the lead of Inspector of Police, Manamadurai, at Malavarayanendal at 5 p. m. The police ordered the mob to surrender their arms. As the mob defied the police and pelted stones at them, the Taluk Magistrate, Sivaganga, who was with the police party, ordered the police to open fire. Even after three rounds were fired, the mob still advanced towards the police party, whereon three more rounds were fired, One person who was injured as a result of the firing died on the way to the hospital.

என்று இருக்கிறது. இது, 500 பேர்; அது 300 பேர்! போலீசின் முறையில் கொஞ்சம் தன்மை இருக்கவேண்டும் என்று சொல்லுவது—அந்த இடத்தில் போலீஸ் அதிகாரி, மனிதனை மனிதனென்று சுட்டார்; கீழத்தூவலில் சுட்ட அதிகாரி மனிதர்களை குருவிகள் என்று நினைத்துச் சுட்டார்—என்பது இதிலிருந்து தெரிகிறது.

"இதற்கு அமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாகப் பதில் அளிக்கக்கூடும் 16-ந் தேதி துப்பாக்கிப் பிரயோகம் செய்த பிறகு, 20-ந் தேதி மக்கள் அடங்கியிருந்தார்கள் என்றால், 20-ந் தேதி கையாண்ட நடவடிக்கைகளை ஏன் 16-ந் தேதி கையாண்டிருக்கக்கூடாது? அப்படி என்றால், இந்த ஐந்து பேர் செத்திருக்கமாட்டார்களே!

"கீழத்தூவலில் போலீசார் சுட்டவிதத்தைப் பார்க்கும்போது இமானுவல் கொலை பற்றிய துப்புகளையே அதனால் அழித்துவிட்டார்களோ என்று நினைக்கிறேன். பாகிஸ்தானில் லியாகத் அலிகானை ஒருவன் சுட்டுக் கொன்றபோது, எப்படி அங்கிருந்த கூட்டத்தினர் அவனைப் பிடித்துப் பிய்த்துக் கொன்றுவிட்டதினால், யார் சதி செய்தார்கள் என்பதைப் பற்றிய ஆதாரமே பாகிஸ்தான் அரசாங்கத்திற்குக் கிடைக்காது போன மாதிரி, இமானுவல் கொலை பற்றி ஏதாவது ஆதாரம் கிடைக்கும்படி இருந்தாலும், போலீசார் நடந்துகொண்ட விதத்தில், அது கிடைக்காமல் அதை இழந்துவிட்டார்கள்; அந்த ஆதாரங்கள்கூட இந்தத் தீயில் பொசுக்கப்பட்டுப் போயிருக்கலாம். இது யூகமே தவிர வேறொன்றுமில்லை; அப்படியும் இருந்திருக்கக்கூடும்; விசாரணையில் இருப்பதால் அதைப்பற்றி நான் கூடுதல் சொல்லவில்லை.

"நமது அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, 'இவ்வளவு சொல்கிறவர்கள் போலீசை வாபஸ் வாங்கவேண்டுமென்று பேசுகிறார்கள்' என்றார். அவர் யாரை மனதில் வைத்துக் கொண்டு சொன்னாரோ, தெரியாது; ஆனால், எங்கள் கழகத்தைப் பொறுத்தவரையில் எங்கள் கழகத்தின் சார்பில் பேசிய அம்மையார் அவர்கள், 'போலீசை வாபஸ் வாங்கக்கூடாது' என்றுதான் சொன்னார்கள்; 'வாபஸ்

(4-ம் பக்கம் பார்க்க)

# காலம் உங்களுக்குப் பாடம் புகட்டும்

## காங்கிரஸ்ஆட்சிக்குக்கடும்எச்சரிக்கை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வாங்கவேண்டும்' என்று சொல்லவில்லை. நடைபெற்ற சம்பவங்களுக்கு ஒரு 'நீதிபூர்வ விசாரணை' (Judicial Enquery) நடத்தப்படவேண்டும் என்பதைத்தான் நாங்கள் அத்தனைபேரும் வலியுறுத்துகிறோம். 'அதுதேவை' என்று சொல்லும்போது, 'ஏற்கனவே விசாரித்த அதிகாரி நல்லவர் அல்லவா—திறமைசாலி அல்லவா' என்று கேட்பதில் பயன் இல்லை. அது, அமளி இருந்தபோது நடைபெற்றது. காலையில் ஒரு விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—'அதை ஏற்படுத்திய காலத்தில் அமைதி நிலவும் என்று எதிர்பார்த்தோம்' என்றார்கள். ஒரு பக்கத்தில் விசாரணை நடக்க, இன்னொரு பக்கத்தில் அமளி நடந்துகொண்டே இருந்தது. ஜஸ்டிஸ் கட்சிக்காலத்திலும் சரி, பிரிட்டிஷ் நிர்வாக முறையிலும் சரி—அமளி எல்லாம் அடங்கிய பிறகுதான் விசாரணை நடத்துவது என்ற கொள்கையைக் கையாண்டிருந்தார்கள்.

"நிதி அமைச்சர் சொன்னபோது, 'அமளி பரவாது என்ற எண்ணத்தில் அதைச் செய்தோம்' என்கிறார்; நாட்டு மக்கள் 'அதிகாரிகள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும், அதற்குக் காட்டுகிற காரணங்களும் போதுமானது அல்ல' என்று எண்ணுகிறார்கள்.

"இந்த அளவிற்குக்கூட மக்களுக்கு மதிப்பளிக்கக் கூடாதா? எல்லா இடங்களுக்கும் சேர்த்து, ஒரு 'நீதிபூர்வ விசாரணை' செய்வதில் என்ன தவறு இருக்கிறது? அதற்கு ஏற்படும் தயக்கம் என்ன? எந்தக் கட்சியையும் ஆதரிக்கவேண்டும் என்பதற்காக, இந்த விசாரணை நடத்தவேண்டும் என்று சொல்லவில்லை; நாங்கள் நேரடியாக சம்பந்தப்பட்ட விஷயங்களில்கூட நீதி விசாரணை கேட்கவில்லை: ஆனால், இந்த விஷயத்திற்குக் கேட்பதற்குக் காரணம், இது சந்தையிலும், அங்காடியிலும், வீடு தோறும், உணவு விடுதிகள் தோறும், நாலைந்து பேர்கள் கூடுகிற இடங்களில் அடிதடி ஏற்படும் அளவிற்கு இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்துவருகிறது. இது, பேச்சுத் திறமையைக் காட்டும் பிரச்சினையாயிருந்தால் உங்கள் வாதங்களை நான் ஏற்றுக்கொள்வேன். அதனால் எனது வாதத் திறமையை உயர்த்திக்கொள்ளப் பயன்படுத்திக் கொண்டிருப்பேன்.

"இன்று நகரத்தில் எந்தப் பக்கத்தில் போனாலும் மாலை நேரத்தில் உணவு விடுதிகளிலெல்லாம், தெருக் கோடிகளிலெல்லாம், சந்தைகளில் பஸ்ஸ்டாண்டுகளிலெல்லாம் பேசப்படுகின்ற பேச்செல்லாம் இந்தப் பிரச்சினையைப் பற்றித்தான்—'ஐந்துபேரை கையைக் கட்டி வைத்துச் சுட்டார்களாமே'—'இல்லை; கையைக் கட்டவில்லை'—என்று இன்னொருவர்—'நீ பார்த்தாயா?'—என்று மற்றொருவர்—'நான் பார்க்கவில்லை; பார்த்தவர் ஒருவர் சொன்னார்'—என்று இன்னொருவர்—இவ்விதமாகப் பேசப்படுவதை நாம் கேட்கிறோம். இந்த ஆட்சியாளர்கள், இதை ஒவ்வொரு மாத்திரமாவது கணக்கில் வைத்துக்கொண்டு இந்த நிலைமைகளை—இந்தச் சந்தேகங்களை நீக்கி, நம்பிக்கையை உண்டு பண்ணவேண்டும்.

"நான்—அல்லது எங்கள் கட்சி, இந்த ஆட்சியாளர்களின் பேரில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுவதன் மற்றொரு காரணம், இப்போது சொல்லப்படுகின்ற தாழ்ந்த நிலையில் இருந்த அந்தப் பகுதிகளை இந்த ஆட்சியாளர் எந்த இலட்சணத்தில் வைத்திருந்தார்கள் என்பதைப் பற்றி நாம் பார்க்க வேண்டும். போலீஸ் அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் வேறு காரணங்களைக் காட்டலாம்—'இங்கேயெல்லாம் போவதற்கு ரோடு வசதியில்லை; வேறு பல வசதிகளும் இல்லாமல் இருந்தது; அதனால்தான், அந்தப் பகுதிகளைச் சீர்திருத்த முடியவில்லை; இன்று நாங்கள் அந்தப் பகுதிகளில், இவைகளையெல்லாம் போக்குவதற்காக—முற்போக்கான பல திட்டங்களை வகுப்பதற்காக Block Development போன்ற பல திட்டங்களை ஆரம்பித்து இருக்கிறோம்'—என்று வேண்டுமானால் நீங்கள் இன்று சொல்லலாம். இப்போதாவது ஆரம்பித்ததற்காக நன்றி! இதுகாறும் ஆரம்பிக்காமல் விட்டுப்போனதற்காக அனுதாபம்! ஆகவே, இவ்விதம் நீங்கள் அந்தப் பகுதிகளை முன்னேற்றாமல் அப்படியே விட்டு வைத்ததுதான் இம்மாதிரியான கலவரங்களுக்குக் காரணம் என்பதை நான் வலியுறுத்திக் கூறுகின்றேன், அதனால்தான் இந்த ஆட்சியாளர்களின்மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறோம்.

"16 மறவர்களைச் சுட்டுக் கொன்றார்கள்; அல்லது 16 ஆதித் திராவிடர்களைச் சுட்டுக் கொன்றார்கள் என்பதோடு, பழிக்குப் பழி சரியாகப் போய்விட்டது என்று மக்கள் கருதமாட்டார்கள். அடுத்த ஆண்டில், அவர்கள் எந்த மண்டலத்திலிருந்தாலும் உங்களைச் சபிக்கப்போகிறார்கள்.

"முன்னாலேயே படுகொலைகள் நடந்துகொண்டிருந்தன—என்று, கூறுகிறீர்கள் இன்று; இவற்றிற்கெல்லாம் காரணம் என்னவென்று கருதுகின்றீர்கள்?

மதிப்பிற்குரிய அங்கத்தினர்—ஆளும் கட்சியைச் சேர்ந்த அம்மையார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்—கலப்புத் திருமணம் எல்லாம் நடந்துகொண்டிருந்தது—என்று; 'முக்குலத்து மக்களிடம் பெண் கேட்பதற்கு அந்தப் பகுதிகளில் போனால் குரல் கொடுக்கமாட்டார்கள்' என்று சொன்னார்கள்.

"சுயமரியாதை இயக்கம் தோன்றின காலத்திலிருந்து கலப்புத் திருமணம் நடந்துவந்திருக்கிறது. உண்மையில், அந்தப் பகுதிகளிலெல்லாம் சுயமரியாதைக் கழகம் அதிகமாகப் பரவியிருந்தால் கலப்புத் திருமணம் நடந்திருக்கும். சுயமரியாதைக் கழகம் மற்ற பல பகுதிகளில் அதிகமாகப் பரவி இருக்கிற காரணத்தினால்தான், இன்று நாட்டில் பல பகுதிகளிலும் கலப்புத் திருமணங்கள் அதிகமாக நடைபெற்று வருகின்றன. கலப்புத் திருமணத்தில்தான் சுவை இருப்பதாக அறிந்ததின் காரணமாகத்தான், பல பகுதிகள் வரவேற்றன. சுயமரியாதை இயக்கம் பரவி இருந்திருக்குமானால் முதுகுளத்தூர் வட்டத்திலும் சாதிவெறி தலைவிரித்தாடி இருக்காது.

"இன்றைக்கு யார்மீது குற்றச்சாட்டுகளைக் கூறுகிறார்களோ, அவர் மூலமாகத்தான் கடந்த 25 ஆண்டுக் காலமாகக் காங்கிரஸ்காரர்கள் ஓட்டுகள் வாங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைய தினம் அந்த ஓட்டுகள் காங்கிரசுக்குக் கிடைக்கவில்லை. மேலும் எங்கே கிடைக்காமல் போய்விடுமோ என்றபயம்—ஆட்சியாளர்களுக்கு. 'எங்கே இந்த வோட்டுகளையெல்லாம் திரு. வி. கே. இராமசாமி முதலியார் கொண்டுபோய் விடுவார்களோ' என்ற பயம்; எங்களைப் பொறுத்தவரையிலும் அவர்களுக்கு வாங்கிக் கொடுத்தாலும் நிச்சயமாக எங்களுக்கு வாங்கித் தரமாட்டார் என்பது நிச்சயம் ஆகவே, எங்களுக்கு அதைப் பற்றிக் கவலையே இல்லை.

"ஆகவே வோட்டு வாங்குவதற்கு மாத்திரம்தான் இவைகளை எல்லாம் செய்கிறீர்களே தவிர, அந்தப் பகுதியிலுள்ள ஆதித் திராவிட மக்கள் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய அளவுக்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? இன்றைக்கு 2,735 ஆதித்திராவிட மக்களுடைய வீடுகளும், 107 தேவர்களுடைய வீடுகளும் சாம்பலாக்கப்பட்டன என்று கணக்குக் கொடுக்கின்றீர்கள் இந்த 2,735 ஆதித் திராவிடர்களுடைய வீடுகள் எல்லாம் வெறும் ஓலைக் குடிசைகள் தானே! இவர்களையெல்லாம் இந்தக் குடிசைகளில்தானே விட்டுவைத்திருந்தீர்கள்? இன்றுவரை அவர்களுக்கு என்ன செய்து கொடுத்திருக்கிறீர்கள்? இதுவரை நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்? ஆதித் திராவிடர்களாகிய அவர்கள், இரத்தம் சொட்டச் சொட்ட முழங்கால் அளவுக்குச் சேற்றிலே வாழுகிறார்கள்.

"குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஆதித்திராவிடர்கள் இறந்துபோனால் அவர்களுடைய பிணத்தைத்தூக்கிக் கொண்டு போவதற்கு பக்கத்திலுள்ள வயல்களைக் கடந்து போகவேண்டும்; நல்ல பாதை கிடையாது. வயல் முதலாளிகள், 'பாதையை விட்டுத்தரமாட்டோம்' என்று சொல்லுகின்றார்கள்.

"இவற்றையெல்லாம் அமைச்சர் கக்கன் அவர்கள் அங்கு வந்திருக்கும் நேரத்தில் அவர்களிடத்தில் எடுத்துக்காட்டினார்கள்; நண்பர் ஏழுமலை அவர்களும் அந்தப் பகுதிகளுக்கு அவர்கள்கூட வந்திருந்தார்கள்—நான் திம்மசமுத்திரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறேன்—நீங்கள் இதுகாறும் ஆதித்திராவிட மக்களைச் சேற்றில் அழுத்திக் கொடுமையில் வைத்திருக்கவில்லை என்றால் நான் அவ்வாறு கருதமாட்டேன். இதுதான் இவைகளுக்குக் காரணமே தவிர வேறு ஒன்றும் இருக்கமுடியாது.

"இவ்வளவு நாட்களாக உங்களுடைய கவனம் எங்கே செலுத்தப்பட்டிருந்தது? அந்தப் பகுதிகளில் ஏன் உங்கள் கவனத்தைச் செலுத்தாமல் இருந்திருக்கிறீர்கள்? அவர்கள் எல்லோரும் காந்தீயத்தின் அடிப்படையிலே வாழ்ந்துகொண்டிருப்பவர்கள்தானே! நீங்கள் வேண்டுமானால் காந்தீயத்திற்குப் புறம்பாகப் போவீர்கள். சுவாமி சகஜானந்தா போன்றவர்கள் காந்தியத்திலிருந்து விலகிப் போகமாட்டார்கள்.

"2735 வீடுகள் எரிந்துபோய் விட்டன. வீடு ஒன்றுக்கு 30 ரூபாய் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது; இப்போது 100 ரூபாய் கொடுக்கப்பட்டதாகப் போலீஸ் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இவைகள் மாத்திரம் போதுமா என்று கேட்கிறேன். நாம் பேசவேண்டியவைகளை எல்லாம் அந்தப் பகுதியில் போய்ப் பேசியிருக்கவேண்டும். இந்தச் சட்டசபைக் கூட்டத்தையே பரமக்குடியில் நடத்தியிருக்கலாம். இவைகள் எல்லாம் அந்த நாட்டிலிருக்கின்ற மக்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். அதற்காகத்தான் சொல்லுகிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

"அமைச்சர்கள் ஏன் அந்தப் பகுதிகளுக்குப் போகவில்லை என்று தோழர் சின்னதுரை அவர்கள் கேட்டதற்கு, 'இவர்களெல்லாம் எங்கே போனார்கள்?'—என்று, அமைச்சர் அவர்கள் கேட்டார்கள்; நாங்களெல்லாம் போய் என்ன செய்யமுடியும்? 'நாங்கள் போகவேண்டும்; போலீஸ் பாதுகாப்பு வேண்டும்' என்று கேட்டபோது, 'கலகம் வரட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று சொன்னீர்கள். 'பாதுகாப்பு வேண்டும்' என்று கேட்கின்ற நேரத்தில் எல்லாம், 'அமளிகள் வரட்டும்; வந்தால் அவர்கள் அடக்கிக் கொள்வார்கள்' என்று சொல்லுகிறீர்கள். எனவே, எதிர்க்கட்சிக்காரர்கள் போய் ஒன்றும் செய்யமுடியாது. 'ஆட்சிப்பொறுப்பில் இருப்பவர்கள்தான் போயிருக்கவேண்டும்' என்று சின்னதுரை அவர்கள் கேட்டதில் என்ன தவறு இருக்கிறது? அவர்கள் ஏதோ உணர்ச்சி வயப்பட்டு கேட்பார்களே தவிர, உங்களைப் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல!

"புயல் அடித்த நேரத்திலெல்லாம் அந்தப் பகுதிகளுக்குப் போயிருந்தால் வோட்டுக் கிடைத்திருக்கும். நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் எனக்கு முன்பே அரசியலில் நீண்டகால அனுபவம் பெற்றிருப்பவர்கள் என்று நினைக்கிறேன்—என்னுடைய தந்தை அரசியலில் ஈடுபட்டிருந்த காலத்திலேயிருந்து ஈடுபட்டிருக்கக்கூடியவர்—அவருடைய மகனுடைய வயதிற்குத்தான் நான் இருப்பேன்; மகன் இருக்கிறாரோ, இல்லையோ எனக்குத் தெரியாது.

அமைச்சர் சி. சுப்பிரமணியம்:—மகன் இருக்கிறார்.

அண்ணா:—இருக்கிறார் என்றால் மகிழ்ச்சி; எனவே, வோட்டு வாங்க வேண்டுமென்ற எண்ணமிருந்தால் புயல் அடித்த நேரத்திலெல்லாம் அங்கு போயிருக்க வேண்டும்; ஆனால் இப்போதல்ல, அதற்குக் காலம்! இப்போது, தன்னைச் சுற்றி ஆட்களை வைத்துக்கொண்டு அடிபடாமல் திரும்பி வந்தாலே போதும்.

"பல்கலைக் கழகப் பக்கம் திரும்பா விட்டாலும்கூட, இந்நாட்டு மக்களை—இந்த நாட்டு அரசியலை நன்றாக நிர்ணயித்து வைத்திருக்கிற நமது முதலமைச்சர் அவர்கள், புயல் அடிக்கிற நேரம் பார்த்து அங்கு போனார்கள்; எந்த இடங்களுக்கு எந்த நேரத்தில் போனால் 'ஓட்டு' கிடைக்கும்—எந்த நேரத்தில் போனால் 'வேட்டு' கிடைக்கும்; எப்போது 'ஓட்டு'—எப்போது 'வேட்டு' என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும் (கைதட்டல் ஆரவாரம்).

"அவர்கள் இதையெல்லாம் நன்கு அறிந்திருக்கின்றார்கள்; எவ்விதமிருந்தாலும், 'இந்தப் பகுதிகளில், நீங்கள் போகவேண்டிய நேரங்களில் போகவில்லை' என்றுதான் நாங்கள் உங்களைக் குற்றஞ்சாட்டுகிறோம். ஆகவே, உங்களிடம் ஒரு துளி மாசு இருந்தாலும்கூட அதை நீக்கிக்கொள்ள வேண்டும்.

"பாகவதம், இராமாயணம் இவைகளைப்பற்றி நமது போலீஸ் அமைச்சர் அவர்களுக்கு நிரம்ப நம்பிக்கை உண்டு என்று நம்புகின்றேன். யாரோ—ஊரில் ஒருவன், 'உத்தம சீதை களங்கப்பட்டிருக்கிறாள்' என்று சொன்னதற்காக, உத்தம சீதையை நெருப்பில் இறங்க வேண்டும் என்ற கடும் சோதனையை இராமபிரான் நடத்தினதையெல்லாம் 'இராமாயண'த்தில் நீங்கள் படிக்கின்றீர்கள். அந்த நேரத்திலும், சீதை இராமனுக்குக் கிடைக்கவில்லை; பூமி பிளந்து உள்ளே போய்விடுகின்றாள்.

"எங்கோ ஒருவன் சொன்ன குற்றத்திற்காக ஒரு சக்கரவர்த்தியே இவ்விதம் பரிசோதனை நடத்தியிருக்கிறார் என்றால், எவ்வளவோ ஆசாபாசங்கள் நிறைந்திருக்கின்ற இந்த உலகத்தில் இருக்கும் நீங்கள், அதுவும் எங்களைப் போன்ற ஆட்களையும் துணைகொண்டு இருக்கக்கூடிய நீங்கள் செய்கின்ற காரியங்களிலும் தவறு இருக்கத்தான் செய்யும். அதை நீக்கிக் கொள்ளுவதற்கு நீதி விசாரணை வைத்தால் என்ன? நீதி விசாரணை வைப்பதன் மூலம் நீங்கள் உங்களையே பரிசுத்தப்படுத்திக்கொள்ள முடியும். அப்போதுதான் ஆளும் கட்சியினருக்கு சுடுவதற்குமட்டும் தெரியும் என்றில்லாமல், மருந்தும் தடவத் தெரியும் என்று பொதுமக்கள் புரிந்துகொள்வார்கள்; அதற்காகவாவது இந்த நீதிமன்ற விசாரணையை நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொள்ளுகின்ற நேரத்தில், அதிலே எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கிற ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு கோணத்திலிருந்து இதைப் பார்த்து முடிவு செய்து தங்களுடைய கருத்துகளைக் கூறுவார்கள்.

"இதைப் பார்க்கின்ற நீங்கள் எதிர்க்கட்சியில் இருப்பவர்களிடையே பிளவுகள் இவ்வளவு இருக்கின்றனவே என்று எடுத்துக்காட்டி, நீங்கள் இன்றைய தினம் மூடிமறைத்து வைத்திருக்கின்ற—உங்களுக்குள் இருக்கின்ற பிளவுகளைக் காட்டிக்கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

"நாங்கள் எதிர்க்கட்சிகள்—எதிர்க்கட்சியல்ல! நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்திருந்தால் 'கிழத்தூவல்'கூட ஒரு சமயம் யோசித்துத்தான் நடந்திருக்கும். இனியாவது இப்படி நடக்காமல் அதற்குப் பதிலாக அறநெறியிலும், அன்புநெறியிலும் ஆட்சி நடத்தப்படும் என்பதற்கு உத்தரவாதம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஆட்சியாளர்கள் கையாண்ட முறையில் நம்பிக்கையில்லை என்று சொல்லி இந்தப் பிரச்சினை குறித்து இப்படிப் பேசியிருக்கிறோம் என்று கூறிக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்."

தோழியர் சத்தியவாணி-முத்து திரு. சந்தானம் ஆகியோரின் பேச்சு பின்னர்வரும்.